பக்கங்கள் 20


# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 32 புதன்கிழமை | 16.07.2025 | அதிர்வு 346

## செம்மணி மனிதப் புதைகுழி

### அகழ்வுப் பணிகள் 21 இல் மீள ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)



யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழியில் இடைநிறுத்தப்பட்ட இரண்டாம் கட்ட 06▶



# யாழ். பிரதேசத்தில் 1996 – 97 இல் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய விசாரணை அறிக்கை கிட்டியது

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வெளியீடு செம்மணி விடயத்தில் திருப்பத்துக்கு வாய்ப்பு?

*- முரசு செய்தியாளர் ந.லோகதயாளன் -*

**வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நால்வர் குழு, யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட 281 பேர் குறித்து விவரங்களுடன் சமர்ப்பித்த விசாரணை அறிக்கை 22 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது வெளிப்பட்டுள்ளது.**

**அவர்களில் 95 வீதத்துக்கும் அதிகமானோர் 1996 - 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். பிரதேசத்தில் இருந்து சீருடைத் தரப்பினரால் வலிந்து கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்கள் என்று தெரிகின்றது.**

**அவர்களின் முழுப் பெயர், விவரம்,** விலாசங்கள் பதிவுகளுடன் இந்த அறிக்கை மூலம் கிட்டி இருப்பதால் அவர்களது உறவினர்களின் மரபணுக்களை இப்போது செம்மணிப் புதைகுழியில் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் மரபணுக்களோடு ஒப்பிடுவதன் மூலம், அந்த மனித எச்சங்களுக்கு உரியவர்களை அடையாளம் காணக்கூடிய வாய்ப்புக் கிட்டலாம் என்று நம்பப்படுகின்றது.

1996 – 97 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ். பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கில் காணாமல் க்கப்பட்டோரின் எலும்புக்கூடுகளே இப்போது செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து அகழ்ந்து மீட்கப்படுகின்றன எனக் கருதப்படும் நிலையில் அவற்றை அடையாளம் காண்பதற்கான ஒரு திருப்புமுனையாக இந்த விசாரணை அறிக்கை விவரம் அமையும் 05▶



யாழ்ப்பாணத்தை இராணுவம் மீளக் கைப்பற்றிய பின்னர், 96 - 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீடுகளில் இருந்து வலிந்து கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டவர்களே செம்மணியில் புதைக்கப்பட்டார்கள் என்று நம்பப்படுகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழிகள் மீண்டும் அகழப்பட்டு, பெரும் எண்ணிக்கையில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படும் நிலையில், அந்த 96 - 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பட்டியல் எங்கே என்ற கேள்வி பல தரப்புகளிலும் எழுப்பப்பட்டது.

அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 05▶



# செம்மணியில் புத்தகப்பையோடு மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதி சிறுமியினுடையது

## நீதிமன்றில் சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கை

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியில் நீல நிறப் புத்தகப்பை (யுனிசெவ் நிறுவனத்தின் புத்தகப்பை), சிறுவர்கள் விளையாடும் பொம்மை போன்றவற்றோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதி 4 - 5 வயதுடைய சிறுமியினுடையது என்று சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

செம்மணிப் புதைகுழியில் இருந்து நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றோடு அகழ்ந்தெடுக்கப்பட்ட சிறுவரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு (நேற்று) முன்னர் மன்றில் சமர்ப்பிக்குமாறு சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா கடந்த 10ஆம் திகதி கட்டளை ஒன்றினை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்று செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அந்த என்புத் தொகுதி தொடர்பான அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை போன்றவற்றோடு அடையாளம் காணப்பட்ட எஸ் - 25 என அடையாளமிடப்பட்ட என்புத் தொகுதி சிறுமியின் என்புத் தொகுதி எனவும், உத்தேசமாக 4 - 5 வயதுடையதாக இருக்கும் எனவும் சட்ட மருத்துவ அதிகாரி மன்றில் தனது அறிக்கையை வெளியிட்டார்.

மேலும் எஸ் - 48, எஸ் - 56 என அடையாளமிடப்பட்ட சிறுவர்களினுடைய என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதிகள், புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட சிறுமியினுடைய என்புத் தொகுதியோடு உடைகள் மற்றும் என்பியல் சம்பந்தமாக ஒருமித்த தன்மைகள் இருப்பதாகவும் மன்றுக்கு சட்ட மருத்துவ அதிகாரியால் சுட்டிக்காட்டப்பட்டது.

புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டது போன்ற என்பு ஆய்வை சிறுவர்களினுடையது என நம்பப்படும் குறித்த இரண்டு என்புத் தொகுதிகள் மீதும் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மன்றால் அறிவுறுத்தப்பட்டது.



# செம்மணியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான தடயங்கள் உண்டு

## தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றில் அறிக்கை

(பிரபாகரன் டிலக்சன்)



யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான தடயங்கள் உள்ளன எனத் தான் கருதுவதாகவும், வழமையாக உடல்கள் நல்லடக்கம் செய்வது போன்று அங்கிருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் காணப்படவில்லை எனவும் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தனது அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் இடம்பெற்றிருந்தன. சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகியிருந்தனர்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுகளின் இடைக்கால அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு (நேற்று) முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா கடந்த 10ஆம் திகதி கட்டளை ஒன்றை வழங்கியிருந்தார்.

இந்நிலையில், நேற்று செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினுடைய அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பான சுருக்கமான விவரங்கள் மன்றுக்கு நீதிவானால் வெளிக்கொணரப்பட்டது.

ராஜ் சோமதேவாவின் அறிக்கையில் முக்கியமாக மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதலாவதாக செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட குறித்த பகுதியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான தடயங்கள் உள்ளன எனத் தாம் கருதுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வழமையாக உடல்கள் நல்லடக்கம் செய்யப்படுவது போன்று புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் காணப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இது சம்பந்தமான மேலதிகமான ஆய்வுகள் தேவை போன்ற முக்கியமான மூன்று விடயங்கள் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. .

இடைநிறுத்தப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# செம்மணிப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு தன்னையும் அனுமதிக்குமாறு சிறீதரன் கோரிக்கை

## பரிசீலிப்பதாக யாழ். நீதிவான் அறிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு தன்னையும் அனுமதிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில் சட்டத்தரணி ஒருவரின் பிரசன்னத்துடன் அகழ்வுப் பணி இடம்பெறும் பகுதிக்கு விஜயம் செய்வது தொடர்பில் பரிசீலிப்பதாக யாழ்ப்பாணம் நீதிவானால் மன்றில் அறிவிக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் பிரதேசத்துக்குத் தனது பிரசன்னம் முக்கியமானது எனவும், தன்னை அனுமதிக்குமாறும் மன்றில் கோரிக்கை முன்வைத்தார்.

அந்தக் கோரிக்கை நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏற்கனவே மன்றில் இருக்கின்ற கட்டளைகளுக்கு அமைவாக நபர் ஒருவர் செம்மணி மனிதப் புதைகுழிக்கு விஜயம் செய்கின்றபோது மன்றுக்கு முறையாக விண்ணப்பம் செய்து தான் விஜயம் செய்வதற்கான காரணத்தைக் குறிப்பிடும் நடைமுறை உள்ளதை நீதிவான் மன்றில் எடுத்துரைத்தார்.

சமர்ப்பணங்களையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சட்டத்தரணி ஒருவரின் பிரசன்னத்துடன் அகழ்வுப் பணி இடம்பெறும் பகுதிக்கு விஜயம் செய்வது தொடர்பில் பரிசீலிப்பதாக நீதிவானால் மன்றில் அறிவிக்கப்பட்டது.

# மஹிந்தவின் அருமை இப்போது புரிகின்றது

## ரோஹித எம்.பி. தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளால் மஹிந்த ராஜபக்ஷவுக்கான மவுசு எகிறியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.



களுத்துறைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"அன்றும், இன்றும், என்றும் எனது அரசியல் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தான். சிலிண்டரில் நான் வாக்குக் கேட்ட வேளையிலும் இதனைப் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். மஹிந்த போன்றதொரு அரசியல் தலைவர் மீள உருவாகப்போவதில்லை. தற்போதைய அரசின் செயற்பாடுகளால் மஹிந்தவுக்குரிய பெறுமதி அதிகரித்துள்ளது.

எமது ஆட்சி இருந்திருந்தால் மஹிந்தவைக் கிழட்டு மைனா எனவும், நாமலைக் குட்டி மைனா எனவும் தேசிய மக்கள்சக்தியினர் விமர்சித்திருப்பார்கள். அன்று எம்மை இப்படி விமர்சித்தவர்களுக்கு மக்கள் இன்று சமூக வலைத்தளங்களில் சிறப்பான பதிவுகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியினருக்கு ஆட்சியை வழங்கியது நல்லது. இப்போது யதார்த்தம் புரிந்திருக்கும். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு எமது கட்சி ஆதரவாளர்களே காரணம். அவர்களும் உண்மையைப் புரிந்து கொண்டுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷவை விரைவில் களுத்துறைக்கு அழைத்து வருவேன்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் அது பற்றிய முறைப்பாடுகள் பெரும் எண்ணிக்கையில் செய்யப்பட்டன என்றும், அவற்றைத் தேடி எடுக்கலாம் என்றும் பல செவ்விகளிலும் குறிப்புகளிலும் அண்மைக் காலத்தில் நான் வெளிப்படுத்தி வந்தேன். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தோடோ அல்லது கொழும்பு அலுவலகத்தோடோ தொடர்பு கொண்டால் அதனைப் பெறலாம் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் வலியுறுத்தி வந்தேன். எனது செய்தியாளர்களையும் அவற்றைத் தேடிப் பிடிக்கும்படி அழுத்தம் கொடுத்து வந்தேன்.

என் யோசனைத் திட்டம் பலித்திருப்பதாகவே தெரிகிறது. மக்களின் முறைப்பாடு பற்றிய பட்டியல் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருக்கும் தேடிபிடியுங்கள் என்றேன் நான். ஆனால், அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை நடத்திய குழுவின் அறிக்கையே இப்போது கிடைத்துவிட்டது.

இந்த அறிக்கை 22 ஆண்டுகளுக்கு முன்னர் கையளிக்கப்பட்ட சமயத்தில் புலிகளுக்கும் அரசு தரப்புக்கும் இடையிலான நேரடி சமரசப் பேச்சுக்கள் இடம்பெற்று, அந்தச் சமரச முயற்சி நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலம். இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்து, எதிர்வினையாற்றிக் கொண்டிருந்த சமயத்தில், இந்த அறிக்கை வந்ததாலோ என்னவோ இந்த அறிக்கை அப்போதும் முக்கியத்துவம் பெறவில்லை. பின்னரும் அதிகம் பேசப்படவில்லை. ஆனால் இப்போது கிடப்பிலிருந்து அது எடுக்கப்பட்டு, இந்தச் சமயத்தில் முக்கிய ஆவணமாக வெளிப்பட்டிருக்கின்றது.

அந்த விசாரணை குழு நடத்திய விசாரணைகளின் அடிப்படையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் பட்டியல் ஒன்று இப்போது கிடைத்திருக்கின்றது. அந்த பட்டியலில் இருப்போர் இப்போது மீட்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு உரியவர்களா என்பது மரபணு சோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டால் - அடையாளம் காணப்பட்டால் - உண்மை நிலை தெளிவாகும்.

இந்த விசாரணை குழு தன்னுடைய விசாரணைகளை நடத்திய காலத்தில் வழமை போல பல இடைஞ்சல்களை - நெருக்கடிகளை - அழுத்தங்களை - வடக்கில் சீருடைத் தரப்பிடமிருந்து எதிர்கொண்டது என்று தெரிகின்றது.

அது பற்றிய முறைப்பாடு ஆட்சித் தலைவரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேரடியாக செய்யப்பட்டமையை அடுத்து, குழுவின் சுயாதீன விசாரணைக்கு இடம் அளிப்பதை உறுதிப்படுத்துவதற்காக, தமது விசேட பிரதிநிதியாக தமக்கு மிக நெருக்கமான - தோழி போன்ற - மனோரி முத்தெட்டுவேகமவை இவ்விடயங்களைக் கையாள சகல அதிகாரங்களுடனும் சந்திரிகா நியமித்தார். புகழ்பெற்ற இடதுசாரியும், முன்னாள் அமைச்சரும், 1972 ஆம் ஆண்டின் அரசமைப்பின் பிதாமகர் என கருதப்படுபவருமான கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வாவின் மகள் தான் இந்த மனோரி முத்தெட்டுவேகம. இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் கலவான தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முத்தெட்டுகமவின் துணைவியாராவார்.

மேற்படி யாழில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை செய்த மனித உரிமை ஆணைக்குழுவின் நால்வர் கமிட்டியின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக பல தடவைகள் மனோரி முத்தெட்டுகம அரச விமானத்தில் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து சென்றார் என்றும், குழுவின் விசாரணைகளுக்கு இடைஞ்சலாக இருந்த படைத்தரப்பு அழுத்தங்களை அடக்கி, விலக்கச் செய்வதில் முக்கிய பங்களித்தார் என்றும் தெரிகிறது.

மனோரி முத்தெட்டுகம ஓரிரு வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டில் காலமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்த குழுவின் அறிக்கை வெளிவந்த இந்தச் சமயத்தில் அந்தக் குழுவோடு தொடர்பு படாமல் வெளியில் இருந்து, அந்தக் குழுவுக்கு விசாரணை செய்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் மனோரி முத்தெட்டுகம ஆற்றிய பங்கு நினைவு கூரப்படத்தக்கதாகும்.

விசாரணை நடத்திய இந்தக் கமிட்டியின் செயலாளராகச் செயல்பட்டவர் எம்.சி.எம். இக்பால்.

குழுவின் 210 பக்க இறுதி அறிக்கை புத்தக வடிவத்தில் வெளியாகி இருக்கின்றது. அந்தப் புத்தகத்தின் அட்டையில் பனை மரங்களோடு காட்சி தருவது செம்மணித் தரவையை ஒட்டிய நிலப் பகுதி என்பது இந்தச் சமயத்தில் குறிப்பிடத்தக்க மற்றொரு விடயமாகும்.

## யாழ். பிரதேசத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கருதப்படுகின்றது.

இந்த விசாரணை அறிக்கையின் ஒரு பிரதியைத் தம் கைவசம் பெற்றுள்ள

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அதனை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மூலம் அதன் உத்தியோகபூர்வ இணையத்தில் வெளியிடச் செய்யும் அழுத்தத்தைக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் எனவும் தெரிகின்றது.

யாழ். பிரதேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகக் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, ஜஸீமா இஸ்மாயில், எம்.சி.எம்.இக்பால் ஆகிய நால்வரைக் கொண்ட குழு ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்திருந்தது.

இந்தக் குழு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம், மானிப்பாய் போன்ற இடங்களில் ஒன்பது கட்டங்களாக அமர்வுகளை நடத்தி, விசாரணைகளை மேற்கொண்டு, முதலில் இடைக்கால அறிக்கையும், பின்னர் இறுதி அறிக்கையையும் சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கையிலேயே 1996 – 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட 281 இற்கும் மேற்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் தெளிவாக வெளியிடப்பட்டிருக்கின்றது.

1990 தொடக்கம் 1998 வரையான காலப் பகுதியில் யாழ். பிரதேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி விசாரிப்பதற்கான பொறுப்பு இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட போதிலும், 1996 – 97 இல் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய முறைப்பாடுகள்தான் பெருமளவில் அந்தக் குழுவுக்குக் கிடைத்தன என்று குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது.

குழுவின் அறிக்கையில் செம்மணி, நாவற்குழி தரவைகளில் படம் இணைக்கப்பட்டு, இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இங்கேதான் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று நம்பப்படுகின்றது எனத் தெளிவான குறிப்பும் – அப்போதே – 22 ஆண்டுகளுக்கு முன்னரே – குறிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாவற்குழியில் இருந்த அரச நெல் களஞ்சியசாலையின் படத்தைப் பிரசுரித்துள்ள அந்த அறிக்கை, தனங்களப்பு, தச்சன்தோப்பு, நாவற்குழி போன்ற இடங்களில் கைது செய்யப்பட்ட பலர் கண்கள் கட்டப்பட்டு, கைவிலங்கிடப்பட்டு, இங்குதான் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்ற குறிப்பையும் தெரிவித்துள்ளது.

அதேபோல் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில், அந்தப் பகுதியைச் சேர்ந்தோர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்ற விவரமும் பதியப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, முறைப்பாடுகளின் அடிப்படையில் பார்த்தால், செம்மணியைச் சூழவுள்ள பிரதேசங்களில்தான் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது அந்த அறிக்கையில் அவதானிக்கப்பட்டுள்ளது.

அரியாலை –17, சாவகச்சேரி – 19, சுண்டுக்குழி – 6, கொழும்புத்துறை – 7, குருநகர் – 28, யாழ் நகர சுற்றாடல் – 20, யாழ். நகரம் – 17, கைதடி – 8, மட்டுவில் – 7, மறவன்புலோ– 6, மீசாலை – 16, நாவற்குழி –19, நல்லூர் – 8, நுணாவில் – 4, தனங்களப்பு – 4, தச்சன்தோப்பு – 5 என்று அறிக்கையின் இணைப்பான வரைவு விவரம் வெளிப்படுத்துகின்றது.

முறைப்பாடுகளின்படி பார்த்தால் யாழ்ப்பாணம் நகரமும் சுற்றாடலும் – 95 மற்றும் 19, சாவகச்சேரி – 31, கைதடி – 11 கொடிகாமம் – 28, மீசாலை – 16, நாவற்குழி – 19 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த விசாரணை அறிக்கையின்படி இவ்வாறு ஆள்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகளே காரணம் என்பது சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக விவரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் குழுவின் அறிக்கையை ஐ.நா. உதவித் திட்ட ஆதரவுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அச் சமயத்தில் அச்சிட்டு வெளியிட்டு இருப்பதும் நினைவூட்டப்படத்தக்கது.

இந்த விசாரணைகளுக்காக அப்போது சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த பத்மநாபன், மேலதிக அரச அதிபராக இருந்த வைத்திலிங்கம், கிருஷாந்தி கொலை வழக்கின் பிரதான குற்றவாளியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, சித்தார்த்தன் போன்றவர்கள் சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டு அவர்களும் சாட்சியம் வழங்கியிருக்கிறார்கள்.

டக்ளஸ் தேவானந்தாவும் சாட்சியத்

(06ஆம் பக்கம் பார்க்க)




# கடவுச்சீட்டை பெறுவதற்கு இணையத்தில் விண்ணப்பம்

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் ஊடாக, கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு, இணையத்தில் விண்ணப்பிக்கும் திட்டத்தை இந்த ஆண்டு முதல் செயல்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகரகங்கள் ஊடாக, அந்தந்த நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளுக்கான இணைய விண்ணப்ப செயல்முறையைத் துரிதப்படுத்துவதற்கான, முன்மொழிவுகள், புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 20 தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகரகங்களை உள்ளடக்கிய வகையில், தேவையான வசதிகளை வழங்குவதற்கும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் நிகழ்நிலையில் தொடர்பு கொள்வதற்கான வசதிப்படுத்தலை மேற்கொள்வதற்கும், முன்மொழியப்பட்டுள்ளது.

## யாழ். பிரதேசத்தில்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு அழைக்கப்பட்டார். அவர் ஒரு பிரதிநிதியைத் தம் சார்பில் விசாரணைக்கு அனுப்பி வைத்தார் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

செல்வம் அடைக்கலநாதன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். ஆனால் அவர் பிரசன்னமாகவில்லை என்று அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த அறிக்கை விசாரணையின் பின்னர் 2003 ஒக்டோபர் 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டமையால், அதற்கு முன்னர் சமாதானப் பேச்சு சமயத்தில் விடுதலைப்புலிகளின் யாழ். அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதியும் சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டு, சாட்சியம் அளித்திருக்கின்றார் என்பது குழுவின் அறிக்கையில் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் நகர கொமாண்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் முல்லைத்தீவு படைமுகாம் தகர்த்து அழிக்கப்பட்டமை ஆகியவை இடம்பெற்ற 1996 ஜுலை மாதத்தில்தான் ஆள்கள் வலிந்து கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் பெருமளவில் யாழ். பிரதேசத்தில் நிகழ்ந்தன என அறிக்கை விவரிக்கின்றது.

சுமார் 210 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை பலர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் சுருக்க விவரங்களையும் உள்ளடக்கி இருக்கின்றது.

இப்படி காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நிவாரண அளிப்பது பற்றிய விடயம் பற்றியும் அதில் விவரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அகழ்வுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்வுப் பணிகளை எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பிப்பதாக சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 65 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன எனவும், 'தடயவியல் அகழ்வாய்வுத் தளம் 01' இல் இருந்து 63 என்புத் தொகுதிகளும், 'தடயவியல் அகழ்வாய்வுத் தளம் 02' இல் இருந்து இரண்டு என்புத் தொகுதிகளும் என மொத்தமாக 65 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன எனவும் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மன்றில் வெளிப்படுத்தினார்.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பான இடைக்கால அறிக்கையும், நீல நிறப் புத்தகப்பையுடன் (யுனிசெவ் நிறுவனத்தின் புத்தகப்பையுடன்) மீட்கப்பட்ட சிறுவரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி தொடர்பான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்று அறிவித்திருந்த நிலையில் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவினுடைய அறிக்கையும், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினுடைய அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. இது தொடர்பான சுருக்கமான விவரங்கள் மன்றுக்கு நீதிவனால் வெளிக்கொணரப்பட்டன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தில் இருந்து காலையில் இரண்டு சட்டத்தரணிகள், மாலையில் இரண்டு சட்டத்தரணிகள் என்று கிரமமாக அகழ்வுப் பணிகளில் முன்னிலையாக மன்றில் அனுமதி கோரிய நிலையில் நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

மேலும் ஊடகவியலாளர்கள் மற்றும் அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் விசேட நிபுணர்கள் மாத்திரமே அகழ்வுப் பணிகளைப் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதித்திருப்பதாகவும் மன்றில் நீதிவானால் அறிவிக்கப்பட்டது.

புதைகுழியில் கண்டெடுக்கப்படும் சான்றாதாரங்கள் சம்பந்தமாகத் தேவையற்ற கட்டுக்கதைகளையும், பொருள் கோடல்களையும், விசனங்களையும் மக்கள் மத்தியில் தவறாகக் கொண்டு செல்லாமல் தடுப்பதற்காகவே சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகவும் மன்றில் அறிவிக்கப்பட்டது.

இடைநிறுத்தப்பட்ட இரண்டாம் கட்ட செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பிப்பதாக சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா நீதிமன்றுக்கு அறிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு தொடர்பான அடுத்த தவணை எதிர்வரும் ஆகஸ்ட் 6ஆம் திகதிக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எச்சரிக்கை தந்த அறிக்கை

''(பாதிக்கப்பட்ட சமூகத்தில்) அமைதி ஏற்படாமல் ஆற்றுப்படுத்தல் (குணப்படுத்தல்) சாத்தியமில்லை. நீதி நிலை நாட்டப் படாமல் அமைதி சாத்தியமில்லை. மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிக்காமல் நீதி சாத்தியமே இல்லை.''

*"There can be no healing without peace; there can be no peace without justice; therecan be no justice without respect for human rights and the rule of law."*

*- Kofi Annan,Secretary General of United Nations.*

- இவ்வாறு அப்போதைய ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அன்னானின் கூற்றை மேற்கோள்காட்டி தன்னுடைய இறுதி அறிக்கையில் ஓர் அதிகாரத்தை தொடங்குகின்றது யாழ். பிராந்தியத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து விசாரிப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்ட நால்வர் குழு.

அதன் அறிக்கை 22 ஆண்டுகளுக்கு முன்னர், 2003 ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் திகதி கையளிக்கப்பட்டிருக்கிறது. ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் உதவியுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இந்த அறிக்கை தயாரித்து நூல் வடிவில் வெளியாகியும் இருக்கின்றது.

வடக்கில் காணாமல் போனோர் பற்றி விசாரிப்பதற்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த நால்வர் குழு, மேற்படி ஆள்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீதான நடவடிக்கை என்ற மூன்றாம் அத்தியாயத்தின் ஆரம்பத்தில்தான் இவ்வாறு அப்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அன்னானின் கூற்றை மேற்கோள்காட்டி இருக்கின்றது. அந்த மேற்கோள் இப்போதும் இலங்கை விவகாரத்துக்கு அப்படியே பொருத்தமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த விசாரணை அறிக்கையின் அந்த மூன்றாம் அத்தியாயத்தில் தொடர்ந்து 'கைதுகள், தடுப்புக்காவல்கள் மற்றும் இடமாற்றங்கள்' என்ற உபதலைப்பில் கூறப்பட்ட முதல் பந்தி கவனிக்கப்பட வேண்டியது.

''அவசரகால விதிமுறைகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்புடைய விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஆனால் விதிகள் தண்டனையின்றி மீறப்பட்டு, பேரழிவு தரும் விளைவுகளுடன் இருக்கின்றன எனத் தெரிகின்றது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கைது செய்யப்படலாம், காலவரையின்றி தடுத்து வைக்கப்படலாம், சித்திரவதை செய்யப்படலாம், பாலியல் பலாத்காரம் செய்யப்படலாம், கொல்லப்படலாம், யாருக்கும் எந்த தகவலும் வழங்கப்படாமல் அவர்களின் உடல்கள் எந்தப் பதிவுகளும் வைக்கப்படாமல் அப்புறப்படுத்தப்படலாம் என்று தெரிகிறது.

''சட்டவிரோதமாக தடுத்து வைத்தல், சித்திரவதை, கற்பழிப்பு, கொலைகள் மற்றும் உடல்களை அப்புறப்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்டவர்கள் பொறுப்பாக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, இந்த நடவடிக்கைகளின் எந்தக் கட்டத்திலும் உடந்தையாக இருந்தவர்களும் கூட பொறுப்பாக்கப்பட வேண்டும்.

''அதேசமயம் கட்டளை ஒழுங்கின்படி (Officials with Chain of Command), மேலே பட்டியலிடப்பட்டுள்ள நடவடிக்கைகளில் அவர்கள் நேரடியாக ஈடுபட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்த நிலைமை இருக்க அனுமதித்த கட்டளை அமைப்பின் உச்சத்தில் இருப்பவர்களுக்கும் (இக்குற்றங்கள் தொடர்பில்) விசேட பொறுப்பு உள்ளது.'' - என் கிறது அந்த அறிக்கை.

அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, "தங்கள் கட்டளையின் கீழ் உள்ளவர்களால் 'காணாமல் போக' உத்தரவிட்ட அல்லது அவை நிகழ்வதைப் பொறுத்துக்கொண்ட கட்டளைச் சங்கிலிப் பொறுப்பைக் கொண்ட அதிகாரிகள் தாங்களாகவே குற்றவியல் பொறுப்பை ஏற்க வேண்டும்" என்பது முக்கியம்.

அந்த அறிக்கை எச்சரித்த விடயங்கள் தாம், அது சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளின் பின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் நடந்தேறின என்பதுதான் பெரும் துரதிர்ஷ்டம்.




# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தல்

அம்பாறை – ஒலுவில், தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் முதலாம் வருட மாணவர்களை நேற்று இரவு 8 மணியுடன், விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவிருந்த பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளதாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடிப் படையாகக் கொண்டு இந்த அறி விப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

தங்கள் மீதான பகிடிவதை தொடர்பில் கையடக்க தொலைபேசியில் பதிவு செய்த காணொலிகளை, பகிரங்கப்படுத் தியமை தொடர்பில் மேற்படி மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான 04 மாண வர்கள் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகத் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான மாணவர் களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக, சென்ற நோயாளர் காவு வண்டியின் சாரதி மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொறியியல் பீடத்தில் முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது, சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபட்டமை தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் இடம்பெற்ற பகிடி வதைக் காரணமாக, பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்களுக்கு ஏற்கனவே வகுப்புத்தடை விதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த சம்பவம் தொடர்பில் 12 மாண வர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகள் நடத்தப்படுவதாக, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

# தாதியர் சேவைக்கு ஆள்சேர்ப்பு: வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

இலங்கை தாதியர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற் கான, ஆட்சேர்ப்புக்கான இரண்டு வர்த்தமானி அறிவிப்புகள் வெளியிடப் படவுள்ளன.



அதன்படி, 2020 முதல் 2022 ஆம் ஆண்டு வரை கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற் றியவர்களில் 2,650 பேரையும், தாதியர் பட்டம் பெற்ற 850 பட்டதாரி களையும் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.



# வெளிநாடுகளுக்குச் சென்ற 7,735 இலங்கையர்கள் பலி

பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற 7735 இலங்கையர்கள் கடந்த 15 வருடங்களில் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் உயிரிழந்தவர்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்றவர்கள் தொடர்பான தகவல்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லையெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம், சூரியன் செய்திச் சேவையால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த 15 வருடங்களில் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற 7735 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அவற்றில் 4769 உடல்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதும், 2966 உடல்கள் இன்னும் நாட்டுக்கு கொண்டுவரப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொண்டு வரப்பட்ட ஒரு உடல் இன்னும் உறவினர்களால் அடையாளம் காணப்படவில்லையெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கட்சி தீர்மானத்தை மீறிய ஐ.ம.சவின் 6 உறுப்பினர்கள் இடைநிறுத்தம்

பேருவளை நகர சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பேருவளை நகர சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் தெரிவின்போது, கட்சியின் தீர்மானத்துக்கு புறம்பாக செயற்பட்டமைக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் நிர்வாகக்குழு மற்றும் செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைய பேருவளை நகர சபையின் நிர்வாகத் தெரிவின்போது, குழுவினரை வழிநடத்தாமை மற்றும் கட்சித் தீர்மானத்துக்கு புறம்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டமை தொடர்பில், பேருவளை தொகுதி அமைப்பாளர் மொஹமட் இப்திகாரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சவூதி அபிவிருத்தி நிதியத்தின் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் அநுராவுக்கும் இடையில் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சவுதி அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் ஏ. அல்-மர்ஷதிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சவூதி அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதும், புதிய திட்டங்களுக்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதும் இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும்.

சவூதி அபிவிருத்தி நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டது. அரச சேவைகளை மிகவும் வலுவாகவும் செயற்திறனுடனும் செயல்படுத்துவதில் முக்கியமான டிஜிட்டல் மயமாக்கலில் அதிக கவனம் செலுத்த நிதியம் உடன்பாடு தெரிவித்தது.

சவுதி அபிவிருத்தி நிதியத்தால் இலங்கையில் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையிலான நீண்டகால நட்புறவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில் சவூதி அரேபியா வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

புதிய திட்டங்களுக்கு சவுதி அரேபிய அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்படும் உதவிகளை, மக்களின் முக்கிய தேவைகளை அடையாளம் கண்டு அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

இலங்கைக்கான சவுதி அரேபிய தூதர் காலித் ஹமூத் நாசர் அல்தசம் அல்கஹ்தானி, சவுதி அபிவிருத்தி நிதியத்தின் ஆசிய செயல்பாட்டு பணிப்பாளர் நாயகம் சவுத் அயித் ஆர். அல்ஷம்மாரி மற்றும் நிதியத்தின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி , தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். பி.எஸ். பண்டார ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.












# மன்னார் பேசாலையில் கனிய மண் அகழ்விற்கான நீர்ப் பரிசோதனை மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கனிய மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்குவதற்கு முன்னேற்பாடாக்ச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்கும் நீர் பரிசோதனை செய்வதற்கும் நீர் வழங்கல் சபை அதிகாரிகள் கொழும்பிலிருந்து நேற்றைய தினம் அங்கு வருகை தந்திருந்தனர்.

மக்களின் எதிர்ப்பால் அவர்கள் ஆய்வு செய்ய முடியாமல் மீண்டும் திரும்பி சென்று உள்ளனர்.

ஏற்கனவே இவ்வாறான ஆய்வுகளுக்கான முயற்சிகள் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் மக்களின் போராட்டத்தினால் அவை தடுத்து நிறுத்தப்பட்டன.

மன்னாரில் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் நடத்தப்பட்ட பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் அது வரையில் இவ்வாறு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது என்றும் அவ்வாறு மேற்கொண்டால் அது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவை எல்லாவற்றையும் மீறி கனிய மண் அகழ்விற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதற்கு ஒவ்வொரு திணைக்களமும் இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்வதற்காக கள விஜயம் மேற்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய எதிர்ப்பு போராட்டத்தில் பொது அமைப்புகள் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மற்றும் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.












# மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் நேற்று ‘நகரக் கடற்கரை பூங்கா’ அமைக்கும் பணி ஆரம்பம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நகர நுழைவாயிலில் பிரதான பாலத்திற்கு அருகாமையில் கடந்த வருடம் “நகர கடற்கரை பூங்கா” அமைக்க அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை முதற்கட்ட பணிகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

உடற்பயிற்சி மேற்கொள்ளவும், பொழுது போக்கிற்காகவும் இயற்கையான சூழல் முறையில் கடற்கரைப் பூங்காவை



அமைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான முதற்கட்ட பணிகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டு ஒப்பந்ததாரரிடம் வைபவ ரீதியாக இந்த வேலைத்திட்டம் கையளிக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன். மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதாப், மன்னார் நகர சபையின் செயலாளர், இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கலாகப் பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் நகரசபைக்கு இந்த இடம் வழங்கப்பட்ட நிலையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

வடமாகாண சுற்றுலா பணியகத்தினால் இந்தச்க் கடற்கரை பூங்கா அமைக்க 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 6 மில்லியன் ரூபா நிதிக்கான வேலைத்திட்டங்கள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மிகுதி 10 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் 09 மாத காலத்துக்குள் இந்த வேலைத் திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.











# லுணுவில சந்தி விபத்து ஒருவர் பலி

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கொழும்பு – புத்தளம் வீதியில் லுணுவில சந்திக்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்ச் வென்னப்புவை பொலிஸார் தெரிவித்தனர்.



சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியில் பயணித்த நபர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனக் கூறப்பட்டது .

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இந்திய மீனவரின் அத்துமீறலை கடற்படையால் தடுக்க முடியாவிடில் அதனை எமது மீனவரிடம் ஒப்படையுங்கள்

## இப்படிக் கோருகின்றார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

தற்போது வடபகுதிக் கடற்பரப்பில் அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறலையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கடற்படையால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் "முதல்வன்" திரைப்படப் பாணியில் அந்தப் பொறுப்புக்களை ஒருமாத காலத்திற்கு வடபகுதி மீனவர்களிடம் ஒப்படைக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பேசப்பட்டது.

அச்சமயம் கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய இழுவைப்படகுகள் எமது வடபகுதிக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களது வாழ்வாதாரங்களைச் சூறையாடிச்செல்கின்றன.

இந்த நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையைத் தடுக்க வேண்டிய கடற்படையினரும், ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாக காரணங்களை மாத்திரம் சொல்கின்ற நிலையே காணப்படுகின்றது.

இந்த அரசாங்கம் இந்த இந்தவிடயத்தில் கூடிய கரிசனையுடன் செயற்பட்டு இந்த இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அத்தோடு கடற்படையினர் இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுப்பதற்கு டோறா படகுகள் வேண்டுமென காரணங்களை இங்கு கூறிக் கொண்டிருக்க முடியாது. இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து திருட்டு வேலைகளில் ஈடுபடும் இந்திய இழுவைப் படகளுக்கெதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்திய மீனவர்களுடைய இத்தகைய அத்துமீறிய செயற்பாடுகளுக்கு இந்திய அரசும், இலங்கை அரசும் ஆதரவளிக்கின்றன என்றே எம்மால் பார்க்க முடிகின்றது.

இந்த விடயத்தில் கடற்படையினர் மீது மீனவ மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.

இவ்வாறாக இந்திய மீனவர்கள், எமது மீனவமக்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடி எமது மக்களை வறுமைக்குட்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் கடற்படையினருக்கு இருக்கின்றது.

எமது மக்களைக் காப்பற்றமுடியவில்லை எனில் எமது பகுதிகளில் படையினர் எதற்கு இருக்கின்றனர்?

படையினரால் இந்த அத்துமீறல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் எமது மக்களிடம் அந்தப் பொறுப்பினை வழங்குங்கள்.

கடற்படையினர் முள்ளிக்குளம் கிராமத்தையும் முற்றாக அபகரித்து வைத்துக் கொண்டு, அந்த கிராமத்திற்குரிய மக்கள் மீள்குடியேறுவதற்கு தடையாக இருக்கின்றனர். எமது மக்களுடைய வீடுகளையும் கடற்படையினர் அடாத்தாக கைப்பற்றி வைத்திருக்கின்றனர்.

கடற்படையினரால் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் "முதல்வன்" திரைப்படத்தில் ஒருநாள் முதலமைச்சரைப் போன்று இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் எமது மீனவ மக்களிடம் ஒரு மாதத்திற்கு ஒப்படையுங்கள். எமது மீனவர்கள் இந்த அத்துமீறிய இந்திய மீனவர்களின் செயற்பாட்டையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவார்கள். - என்றார்.







# வரி குறைப்பு பேச்சுவார்த்தைக்காக அமெரிக்கா செல்கிறது இலங்கை குழு



இலங்கை ஏற்றுமதிகளுக்கு அமெரிக்கா விதித்துள்ள 30 சதவீத வரியை மேலும் குறைப்பது குறித்து கலந்துரையாடுவதற்கான இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 18 ஆம் திகதி வொஷிங்டன் செல்லவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 1 ஆம் திகதிக்கு முன்னர், இலங்கை மீது விதிக்கப்பட்ட வரியை குறைப்பதற்கு, எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இருதரப்பு ஒப்பந்தத்தை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளதாகவும், சாதகமான முடிவொன்று கிடைக்கும் என அரசாங்கம் நம்பிக்கையுடன் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், வொஷிங்டனுக்கு பேச்சுவார்த்தைக்காக செல்லும் இலங்கை பிரதிநிதிகள் குழுவில், திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் உள்ளடங்குகின்றனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.




# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

தமது நிறுவனம் வழங்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் கட்டுப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் 17/2005 மற்றும் 2005 ஒக்டோபர் 05ஆம் திகதி அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களங்களின் பிரதானிகள், கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டப் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என ஆணைக்குழுவின் சில நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் சட்டத்திற்குட்பட்டு வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமைய மீள மேன்முறையீடு செய்யும் நடைமுறை இல்லை எனவும் மேன்முறையீட்டை சமர்ப்பித்து பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது சட்டத்திற்கு முரணானது எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேற்படி பரிந்துரைகளை நடைமுறைபடுத்தாவிட்டால் அதற்கு எதிராக ஆணைக்குழு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நிறுவனங்களும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கிறார் கமல்ஹாசன்





மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஜூலை 25 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கிறார்.

இதுதொடர்பில் மக்கள் நீதி மய்யம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மாநிலங்களவை (ராஜ்ய சபா) தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன், மக்கள் நீதி மய்யத்தின் சார்பாக மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கமல்ஹாசன், எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு பதவியேற்கவுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பி.க்களாக இருந்த வைகோ, பி.வில்சன், சண்முகம், முகமது அப்துல்லா, அன்புமணி மற்றும் சந்திரசேகரன் ஆகிய 6 பேரின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதியுடன் முடிகிறது. தொடர்ந்து, அந்த 6 இடங்களுக்கான தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தமிழக சட்டப்பேரவையில் எம்.எல்.ஏக்கள் எண்ணிக்கை அடிப்படையில் 6 இடங்களில் 4 தி.மு.கவுக்கும், இரண்டு அ.தி.மு.கவுக்கும் கிடைக்கும். அதனடிப்படையில், தி.மு.க. சார்பில் 4 இடங்களுக்கு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், பி.வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோரும், அ.தி.மு.க. சார்பில், தனபால் மற்றும் ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோரும் அறிவிக்கப்பட்டனர்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த ஜூன் 2 ஆம் திகதி தொடங்கி 9 ஆம் திகதி வரை நடைபெற்றது. தி.மு.க, அ.தி.மு.க. வேட்பாளர்கள் மற்றும் பத்மராஜன் உட்பட 7 சுயேச்சைகளும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

வேட்பு மனுக்கள் பரிசீலனை ஜூன் 10 ஆம் திகதி சட்டப் பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதில், எம்.எல். ஏக்கள் முன்மொழிவு இல்லாத காரணத்தால் சுயேச்சைகளின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கமல்ஹாசன், பி.வில்சன், கவிஞர் சல்மா மற்றும் சிவலிங்கம் ஆகியோரது மனுக்கள் ஏற்கப்பட்டன.

இரட்டை இலை தொடர்பான வழக்கு தேர்தல் ஆணையத்தில் நிலுவையில் உள்ள நிலையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என பழனிசாமி வேட்புமனு தாக்கல் படிவங்களில் கையெழுத்திட்டிருப்பதால், அ.தி.மு.கவினரின் மனுக்களை நிராகரிக்க வேண்டும் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த வா.புகழேந்தி கோரிக்கை விடுத்திருந்தார். இருப்பினும், அ.தி.மு.க. வேட்பாளர்கள் இருவரின் மனுக்களும் ஏற்கப்பட்டன.

இதையடுத்து, தி.மு.க. வேட்பாளர்களான பி.வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், அதி.மு.க. வேட்பாளர்கள் ஐ.எஸ். இன்பதுரை, தனபால் ஆகிய 6 பேரும் மாநிலங்களவை உறுப்பினர்களாக போட்டியின்றித் தேர்வாகினர்.

# பூமிக்கு திரும்பிய ஷூபன்ஷு சுக்லாவுக்கு மோடி வரவேற்பு; குடும்பத்தினர் நெகிழ்ச்சி

சர்வதேச விண்வெளி நிலையத்துக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தை நிறைவு செய்து பூமிக்குத் திரும்பியுள்ள குரூப் கப்டன் ஷுபன்ஷு சுக்லாவை, இந்திய மக்களுடன் இணைந்து வரவேற்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“விண்வெளிக்கான தனது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தை நிறைவு செய்து பூமிக்குத் திரும்பியுள்ள குரூப் கப்டன் ஷுபன்ஷு சுக்லாவை நாட்டு மக்களுடன் இணைந்து வரவேற்கிறேன்.

சர்வதேச விண்வெளி நிலையத்தைப் பார்வையிட்ட இந்தியாவின் முதல் விண்வெளி வீரராக, அவர் தனது அர்ப்பணிப்பு, துணிச்சல் மற்றும் முன்னோடி மனப்பான்மை மூலம் கோடிக்கணக்கானவர்களின் கனவுகளை ஊக்குவித்துள்ளார். இது நமது சொந்த மனித விண்வெளி பயணமான ககன்யானை நோக்கிய மற்றுமொரு முக்கிய நடவடிக்கை” என தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள செய்தியில்,

“வரலாற்று சிறப்புமிக்க ஆக்சியம்-4 பயணத்திலிருந்து குரூப் கேப்டன் ஷுபன்ஷு சுக்லா வெற்றிகரமாக திரும்பியுள்ளார். இது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை தரும் தருணம். அவர் விண்வெளியை மட்டும் தொடவில்லை, இந்தியாவின் விருப்பங்களை புதிய உயரத்திற்கு உயர்த்தியுள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்று திரும்பிய அவரது பயணம் ஒரு தனிப்பட்ட மைல்கல் மட்டுமல்ல, இந்தியாவின் வளர்ந்து வரும் விண்வெளி லட்சியங்களுக்கான பெருமைமிக்க முன்னேற்றம். அவரது எதிர்கால முயற்சிகளில் அவருக்கு பெரும் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன்.” என தெரிவித்துள்ளார்.



மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளிக்கான மத்திய இணையமைச்சர் ஜிதேந்திர சிங்,

“இது உண்மையிலேயே உலகுக்கு பெருமை சேர்க்கும் தருணம். இந்தியாவுக்கு பெருமை சேர்க்கும் தருணம். ஏனெனில் இந்தியாவின் மகன்களில் ஒருவரான அவர், தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பி உள்ளார்.” என்று தெரிவித்துள்ளார்.

ஷுபன்ஷு சுக்லா பத்திரமாக பூமிக்குத் திரும்பியதை அடுத்து, அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி உள்ளனர். லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய ஷுபன்ஷு சுக்லாவின் தந்தை ஷம்பு தயாள் சுக்லா,

“ஷுபன்ஷு சுக்லா பாதுகாப்பாக தரையிறங்கியதற்கு நாங்கள் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் ஷுபன்ஷு சுக்லாவை ஆசிர்வதித்து எங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.” என்று தெரிவித்துள்ளார்.



# சீனா - தைவான் இடையே பதற்றநிலை அதிகரிப்பு

தாய்வான் மற்றும் சீனாவுக்கிடையில் நிலவும் பதற்ற நிலை அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவின் தாக்குதலுக்கான சாத்தியத்தைக் கருத்திற் கொண்டு, தாய்வான் இராணுவம் தன்னை தயார்ப்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கான ஒரு கட்டமாக, வெவ்வேறு பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்குஆயுதங்களைசுரங்கதொடருந்துகள் மூலம் விரைவாகக் கொண்டு செல்லும் வகையில் இராணுவம் ஒத்திகைகளை மேற்கொண்டுள்ளது.

அதுமட்டுமின்றி பொதுமக்களுக்கு தாக்குதலின் போது தற்காத்துக் கொள்வதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், எதிரி தாக்குதலால் சேதமடைந்த விமான ஓடுபாதைகளை இரவிலேயே சீரமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும், சீனாவின் அடுத்த கட்ட நிலைப்பாடு எது என்ற குழப்பத்தில் இருக்கும் நிலையில், தாய்வானின் பாதுகாப்பு தயாராகவே உள்ளதென சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியுள்ளது.







# அணுசக்தி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கும் அமெரிக்கா

## ஈரான் தகவல்

மீண்டும் அணுசக்தி பேச்சுவார்த்தையை தொடங்க அமெரிக்கா முயற்சி செய்து வருகிறது என ஈரான் தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சியில் உரையாற்றிய போது இந்த விடயத்தை ஈரான் வெளி விவகார அமைச்சர் சையத் அப்பாஸ் அரக்சி கூறியுள்ளார்.

பேச்சவார்த்தையை எங்கே, எப்போது, எப்படி நடத்தலாம் போன்ற அம்சங்களை டெஹ்ரான் ஆராய்ந்து வருகிறது.

அதேவேளை, அவசர அவசரமாக நடத்தப்படும் எந்தப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட ஈரான் தயாராய் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப், ஈரான் மீதான தடை உத்தரவுகளை விலக்கத் தாம் தயாராய் இருப்பதாகக் கூறியிருந்தார்.

இம்மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் நடந்த இரவு விருந்து நிகழ்வின்போது ட்ரம்ப் அவ்வாறு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மெக்சிகோ தக்காளி இறக்குமதிக்கு 17 வீத வரி; அமெரிக்கா தீர்மானம்





மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தக்காளிக்கு 17 வீத வரியை அமெரிக்கா விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான புதிய தக்காளிகள் மீது 17.09 சதவீத ஆன்டிடம்பிங் வரியை அமெரிக்கா விதிக்க ஆரம்பித்துள்ளது.

இது, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை எதிர்கொள்வதற்கான ஒரு அத்தியாவசிய நடவடிக்கை என்று வொஷிங்டன் தரப்பு தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம், மெக்சிகோ தக்காளிகளை இது போன்ற கட்டணங்களில் இருந்து பாதுகாத்து வந்த நிலையில், அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அமெரிக்க வணிகத் துறை திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

அமெரிக்க வணிகச் செயலாளர் ஹோவர்ட் லூட்னிக் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மெக்சிகோ எங்கள் சிறந்த நட்பு நாடுகளில் ஒன்றாகும்.

இருப்பினும், நீண்ட காலமாக எங்கள் விவசாயிகள் தக்காளிகள் போன்ற பொருட்களின் விலையை குறைத்து, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளால் நசுக்கப்பட்டு வந்த நிலையில் அது இன்றுடன் முடிவடைகிறது.” என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கொள்கை மாற்றம், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பரந்த வர்த்தக கொள்கைகள் மற்றும் மெக்சிகோவுடனான அணுகுமுறையுடன் நேரடியாக ஒத்துப்போகிறது என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க புதிய தக்காளி சந்தையில் மெக்சிகோ ஒரு ஆதிக்கம் செலுத்தும் நாடாக உள்ள நிலையில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு 30 வீதமாக இருந்த நிலையில், தற்போது அமெரிக்காவின் தக்காளி தேவையில் சுமார் 70 வீதம் மெக்சிகோ பூர்த்தி செய்கின்றது.

அமெரிக்க தக்காளி உற்பத்தியாளர்கள் நியாயமான முறையில் போட்டியிடுவதை உறுதி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிவித்து 2019 தக்காளி ஒப்பந்தத்தில் இருந்து விலகும் தனது நோக்கத்தை அமெரிக்கா ஏப்ரல் மாதத்திலேயே சமிக்ஞை செய்திருந்தது.

இருப்பினும், இந்த புதிய வரிகள் அமெரிக்க நுகர்வோருக்கான தக்காளி



விலையில் ஒரு பெரிய உயர்வை ஏற்படுத்தும் என்று பல வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதிய வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக, மெக்சிகோ அரசு திங்கட்கிழமை தனது உள்நாட்டு தக்காளி உற்பத்தியாளர்களுடன் இணைந்து 17 சதவீத வரியின் எதிர்பார்க்கப்படும் பொருளாதார தாக்கத்தை தணிக்க செயல்படுவதாக உறுதிப்படுத்தியுள்ளது.

மெக்சிகோவின் பொருளாதாரம் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை பெரிதும் சார்ந்துள்ள நிலையில் அதன் ஏற்றுமதியில் சுமார் 80 சதவீதம் அதன் மிகப்பெரிய வர்த்தக பங்காளியான அமெரிக்காவிற்கு செல்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.07.2025




மற்றவர்களுடன் பழகும்பொழுது எப்படி பழகுகிறீர்கள் என்று கவனத்தில் கொண்டு பழகுங்கள்.பலன்கள் தாமாத மாகக் கிடைக்கும்.பொறுமையுடன் இருந்தால் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறலாம்.

பணியைப் பொறுத்தவரை அதிக முயற்சி தேவை.இன்று பணியில்தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் காதலில் வெற்றி பெறலாம். இதனால் மோதல்களைக் குறைக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இல்லை.இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். அதிக பணம் சம்பாதிக்கும் திறமை குறைந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று பயணங்கள் ஏற்படலாம். இன்று பிறருடன் தொடர்பு கொள்வதில் குறைபாடு காணப்படும்.உணர்ச்சி வசப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படாது.சக பணியாளர்களிடம் சுமுகமான உறவு நிலை காணப்படாது.

உங்கள் பிரியமானவருடனான உறவில் நல்லி ணக்கம் காணப்படாது.உணர்ச்சி வசப்படாமல் இருப் பதற்கு முயற்சி செய்து காதலை மகிழ்ச்சியாக்குங்கள்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய் நேரலாம்.வீண் செலவுகள் ஏற்படலாம்.பதற்றம் காரணமாக கால்களில் வலி காணப்படும்.ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமை யுடன் கையாண்டால் எதையும் எளிதாக முடிக்கலாம்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருக்கும்.குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் பிரியமானவருடன் மோதல்கள் காணப்படும்.நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.அதனால் உங்கள்அடிப்படைதேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம். இன்று சிறப்பான நாளாக அமையாது.




இன்று உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள்விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

இன்று பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான நல்ல வாய்ப்புகளும் இன்று கிடைக்கும்.

உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு காணப்படும். உங்கள் துணையிடம் அன்பான வார்த்தைகளை பரிமாறிக்கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு சௌகரியமாக இருக்கும். நீங்கள் நிதி விடயத்தில் சுதந்திரமாக விரும்பியதை செய்ய இயலும்.




நீங்கள்இன்று பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.மேலும் முக்கியமான பணிகளை ஆற்ற வேண்டியிருக்கும். எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இருமுறை ஆராய்ந்து செய்ய வேண்டும். இன்று பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது.பணிச்சுமை அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை உருவாக்கும்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு எழும். ஒற்றுமையை தக்க வைக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக பயணம் காரணமாக பணத்தை செலவு செய்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு இருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும். இன்று அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.என்றாலும் உங்கள் சமயோசித புத்தியினால் உங்கள்செயல் களை நன்கு ஆற்றுவீர்கள்.

இன்று புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.அது உங்களுக்கு புதிய சவாலாக இருக்கும்.இந்தச் சவாலை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு காணப்படும். விஷயங்களை இலேசாக எடுத்துக் கொண்டு உறவை நல்லுறவாக ஆக்க வேண்டும்.

இன்ற வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணம் சேமிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.

நீங்கள் சிறிது பதற்றமாகக் காணப்படுவீர்கள். செரிமானக் கோளாறுகள் காணப்படும். சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். உங்களது சூழ்நிலையைக் கண்டு உணரச்சிவசப்படாதீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணிகள் திறம்பட செயலாற்ற இயலாது.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் வேறு வேலையைத் தேடுவீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் இன்று விவாதத்தில் ஈடுபட நேரலாம். நிலைமை மோசமாகாமல் தடுக்க அதனை தவிர்ப்பது நல்லது.

நிதிவளர்ச்சி இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதலான செலவினங்களை சந்திக்க நேரலாம்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.புதிய நபர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு கிடைக்கும். இன்று முழுவதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் இன்று திருப்திகரமான நிலை காண்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள்இன்று காற்றில் பறப்பது போல உணர்வீர்கள். காதல் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.07.2025




இன்று முழுவதும் வேலையில் மும்முரமாக இருப்பீர்கள். நல்ல முடிவுகளை எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும்.நீங்கள் கூடுதலான பணிகளை ஆற்ற கடமைப்படுவீர்கள்.

இன்று திருமணம் பற்றிய முடிவு எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளி வைக்கவும். இன்று உங்கள் பிரியமானவருடன் பேசுவதற்கு உகந்த நாள் கிடையாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு அதை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும்.உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. புத்திசாலித்தனமாக செயலாற்றுவதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம்.

பணிசார்ந்த பயணங்கள் இன்று சாத்தியம். உங்கள் சகபணியாளர்களிடம் நல்ல உறவுமுறை பராமரிப்பது அவசியம்.உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது முக்கியம்.

உங்கள் பிரியமானவருடன் உங்கள் உறவை பராமரிக்க விரும்பினாலும் சில சமயங்களில் நீங்கள் மனநிலையை இழப்பீர்கள்.

இன்று பண விடயத்தில் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள்.




இன்று மந்தமான நாள். உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் கவலைகள் அதிகரிக்காமல் இருக்க தேவையற்ற எண்ணங்களை கைவிடுங்கள்.

இன்று பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது.பணியில் அதிக தவறுகள் ஏற்படும். அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். கேள்விப்படும் வதந்திகள் உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உரையாடும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

இன்று பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது.




இன்று பலன் தரும் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். இன்று உறுதியும் தைரியமும் உங்களிடம் காணப்படும்.

சக பணியாளர்களிடம் நட்புமுறையில் பழகுவீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

உங்கள் துணையுடனான பேச்சிலும் செயலிலும் இனிமை காணப்படும். இது உங்கள் உறவுப் பிணைப்பபை வலுவாக்கும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும்.இன்று பணத்தை சேமிக்கவும் இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று அனைத்தும் உங்களுக்கு சிறப்பாக காணப்படுவதால் நீங்கள்ஆரோக்கியமாக இருப்பீர்கள்.





# அசுவெசும கொடுப்பனவுக்காக காத்துக் கிடக்கும் பொதுமக்கள்

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

அசுவெசும கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்காக நோர்வூட் பிரதேச செயலகத்தின் முன்பாக நேற்று நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்துள்ளனர்.

அசுவெசும தொகையை பெற்றுக் கொள்வதற்காக கடந்த நான்கு மாதங்களாகத் தாங்கள் காத்திருந்தனர் எனவும், இதனால் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனவும் அங்கு வந்திருந்த அசுவெசும பயனாளர்கள் குறிப்பிட்டனர்.

ஒவ்வொரு நாளும் காலையில் இருந்து மாலை வரை காத்திருந்து ஏமாற்றமாகவே திரும்பி செல்லுகிறோம். அவ்வாறு நாங்கள் காத்திருந்தாலும் வீட்டுக்கு போகுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

எமக்கு எவ்வித கொடுப்பனவுகளும் இல்லை. நாங்கள் இப்படி கடந்த பத்து மாதங்களாக வந்து சொல்லுகின்றோம் என அவர்கள் தெரிவித்தனர்

இதேவேளை நேற்றுக் காலைமுதல் அஸ்வெசுமவினை பெற்றுக்கொள்ள நோர்வூட் பிரதேச செயலகத்திற்கு முன்பாக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடதக்கது.

